"இலக்கம் உடம்பு இடும்பைக்கு" (குறள்:63:7). 3. இலட்சியம்: "வில் தொழில் உள் இட்டு இலக்கத்தின் படை ஏறு பல காட்டலும்" (பெருங்:37:49-51). 4. நூறாயிரம் கொண்ட ஒரு பேரெண்: "ஒன்பதிற்று எட்டு இலக்கமும்" (கலம்:10). 5. எண்: "இலக்கம் அற்ற களிறு இழந்து" (வி.பா:42:23).

**இலக்கம் (உ)** ஒளி: "எல்லே இலக்கம்" (தொல்:16:21).

**இலக்கர் (பெ)** கூறை: "மடியே புட்டம் இலக்கர்... புடைவை கூறை" (நிக.தி:7:275).

**இலக்காரம் (பெ)** புடைவை: "இடையறு புடைவை ஆறைந்து இலக்காரம் என்றும் பெயராம்" (நிக.சூ:7:69)

**இலக்கித்து (11வி)** எழுதி: "இவ் உருவு நெஞ்சு என்னும் கிழியின் மேல் இருந்து இலக்கித்து" (சீவ:1:151).

**இலக்கிதம் (பெ)** குறிக்கப்பட்டது: "பேசும் பொருளுக்கு இலக்கிதம் ஆய்" (வாசு:632).

**இலக்கியம் (பெ)** 1. இலக்கணத்தை உடையது: "காம நூலினுக்கு இலக்கியம் காட்டிய வளத்தார்" (சூளா:459). 2. எடுத்துக்காட்டு: "இம் மொழிகட்கு அந்தோ இலக்கியம் ஆயினுளே" (யசோ:2:23). 3. மறை: "நால் வகை இலக்கண இலக்கியம் நலத் தக மொழிந்தனை" (நக்:4:39). 4. முன் ஓடி (வழிகாட்டி): "சாற்றும் பதிகம் மூல இலக்கியம் ஆக எல்லாப் பொருள்களும் முற்ற" (பெரிய:2180).

**இலக்கு (பெ)** 1. குறி: "சார்பின் தோன்றித் தத்தமில் மீட்டும் இலக்கு அணத் தொடர்தலின்" (மணி:30:17-8). 2. புகல்: "எத் தவத்தோர்க்கும் இலக்காய் நின்ற எம் பெருமான்" (சம்:1:4:10).

**இலக்குமி (பெ)** திரு மகள்: "பொருளின் செல்வி... இலக்குமி...திருமகள் பெயரே" (நிக.பி:2:50).

**இலகடம் (பெ)** அம்பாரி: "யானை மேல் இளம் பிடியின் மேல் நிரைத்து இடையறுத பொன் இலகடங்கள்" (கலிங்:10:60).

**இலகிய (11வி)** விளங்குகின்ற: "பட்டு இலகிய முலை அரிவையர்" (சம்:3:88:2).

**இலகின (11வி)** விளங்கின: "மலர் இலகின வளர் பரிதியின்" (பரி:1:23-4).

**இலகு (வி)** ஒளிர்கின்ற: "உலக நோன்பிகள் ஒருங்கு உடன் இட்ட இலகு ஒளிச் சிலாதல மேல் இருந்தருளி" (சில:15:153-4).

**இலகு (பெ)** 1. குற்றெழுத்து: "குறிலதுவே வேறு இயல் செய்கை இலகு என்றாகும்" (வீர:132). 2. நொய்ம்மை: "இலகும் நொவ்வும் இலேசும் நொய்ம்மை" (நிக.தி:8:45).

**இலகுதல் (பெ)** ஒளிவிடல்: "இலகுதல்...ஒளிவிடல் ஆகும்" (நிக.பி:7:181).

**இலங்க (11வி)** விளங்க: "ஈகைக் கண்ணி இலங்கத் தைஇ" (புற:353:2-3).

**இலங்கடை (11வி)** இல்லாத வழி: "எவனோ அன்பு இலங்கடையே" (நற்:174:10-11).

**இலங்கம் (பெ)** கூடுகை: "திண்ணம் ஆர் இலங்கம் ஆகச் சில பகல் சிந்தை செய்தான்" (கோ.பு:3:79).

**இலங்கல் (பெ)** ஒளி விடுதல்: "அலங்கல்...இலங்கல் ஒளி விடுதல் இசைக்கும்" (நிக.தி:8:58).

**இலங்கா தீவம் (பெ)** இலங்கைத் தீவு: "இலங்கா தீவத்துச் சமனொளி என்னும் சிலம்பினை எய்தி" (மணி:28:107-8).

**இலங்காது (11வி)** விளங்காமல்: "மருப்புப் பிறையின் மிகச் சுடர்ந்து இலங்காது" (பெருங்:112:165).

**இலங்காமை (11வி)** வெளிப்படாமல்: "கலங்காமைக் காத்தல் கருப்பம் சிதைந்தால் இலங்காமைப் போர்த்தரல்" (சி.மூ:72).

**இலங்கி (11வி)** 1. விளங்கி: "இனக் குருகு...அரைசர் ஒண் படைத் தொகுதியின் இலங்கித் தோன்றும்" (நற்:291:3-4). 2. பொருந்தி: "ஒள் மணித் தாரொடு பல் மணிப் புளகம் விலங்கும் நீளமும் இலங்கித் தோன்றி" (பெருங்:60:113-4).

**இலங்கித்திட்டான் (11வி)** குதித்திட்டான்: "இமைப்பினின் இலங்கித்திட்டான்" (சீவ:10:60).

**இலங்கிய (11வி)** விளங்கிய: "இமைப்போன் கண் மிசை இலங்கிய ஒளியொடு" (பெருங்:124:64).

**இலங்கிழை (பெ)** 1. விளங்குகின்ற அணிகளை அணிந்தவள்: "இலங்கிழாய் இன்று மறப்பின் என் தோள் மேல் கலம் கழியும் காரிகை நீத்து" (குறள்:127:2). 2. "எற்பெறு துயரமொடு இலங்கிழை இறைஞ்சி" (பெருங்:34:243).

**இலங்கின (11வி)** விளங்கித் தோன்றின: "முலை முகம் செய்தன முள் எயிறு இலங்கின" (அக:7:1-2).

**இலங்கு (11வி)** விளங்குகின்ற: "கோடு ஈர் இலங்கு வளை நெகிழ" (குறு:11:1).

**இலங்குபு (11வி)** விளங்கி: "இணை முலை இடைப்பட்டு இலங்குபு பிறழும் துணை மலர்ப் பொற் கொடி துளங்கு நுசுப்பினை" (பெருங்:100:216-8).

**இலங்கும் (11வி)** விளங்கும்: "நிறையுறு மதியின் இலங்கும் பொறையன்" (நற்:346:8).

**இலங்குவன (11வி)** விளங்குவன: "வலம் படு முரசின் இலங்குவன விழூஉம் அவ் வெள் அருவி" (பதி:78:1-2).

**இலங்கை (பெ)** 1. தொண்டை நாட்டில் உள்ள ஓர் ஊர் (மாவிலங்கை): "நெல் அமல் புரவின் இலங்கை கிழவோன் வில்லியாதன் கிணையேம் பெரும" (புற:379:6-7). 2. ஆற்றிடைக் குறை: "இலங்கையும் துருத்தியும் என வரும் பெயரோடு அரங்கமும் ஆற்றிடைக் குறை என அறைவர்" (நிக.தி:5:63).

**இலங்கைக் கிழவன் (பெ)** இராவணன்: "இலங்கைக் கிழவற்கு இளையான் இலங்கைக்கே போந்து இறை ஆயதூஉம் பெற்றான்" (பழ:92).

**இலச்சித்து (11வி)** நாணி: "இவ் வகைப் பட்டு மிகவும் இலச்சித்துப் பின்னும் யாது செய்தான் ஸ்ரீவீஷ்மன்" (பா.உ:497).

**இலச்சினை (பெ)** 1. முத்திரை: "புன் புல வழி அடைத்து அரக்கு இலச்சினை செய்து" (மழி.ச.வி:76). 2. அடையாளம்: "எவ் வுலகில் எத் திறமும் மாதேயும் பாகன் இலச்சினையே" (சை.சா:2:82). 3. மோதிரம்: "விரல் அணி ஆழி வீகம் இலச்சினை மோதிரம் என்ன மொழியற் பால" (நிக.தி:7:88).

(நிக.தி:2:142,143). 5. மணமகள்: ''மணமகள்...இல்லாள்... பெண் பெயர்'' (நிக.பி:5:194). 6. தேவி: ''இல்லவள்... இல்லாள்...தேசி நாமம்'' (நிக.சூ:2:79).

**இல்லாள் (11வி)** இல்லாதவள்: ''கான நறு வேங்கைக் கிழாள் கணவனொடும் வானக வாழ்க்கை மறுதரவோ இல்லாளே'' (சில:24:24:3-4).

**இல்லாளன் (பெ)** இல்லாதவன்: ''உளன் இல்லாள எனக்கு ஈங்கு உரையாய்'' (மணி:22:131-2).

**இல்லான் (பெ)** இல்லாதவன்: ''நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம்'' (குறள்:41:7).

**இல்லி (பெ)** துவாரம்: ''இல்லி தூர்ந்த பொல்லா வறு முலை'' (புற:164:3-4).

**இல்லிடம் (பெ)** 1. ஊர்: ''பூக்கம் கேடகம்...இல்லிடம்... ஊரின் பெயரே'' (நிக.பி:4:28). 2. வீடு: ''மனை நகர்...இல் இடம்...இவை வீடு என்ப'' (நிக.பி:4:219).

**இல்லிர் (பெ)** வீட்டிலுள்ளீர்: ''இல்லிரே உண்ணு நீர் வேட்டேன் என வந்தாற்கு'' (கலி:51:5-6).

**இல்லுறை கடவுள் (பெ)** வீட்டில் வாழும் தெய்வம்: ''இல் உறை கடவுட்கு ஆக்குதும் பலியே'' (அகம்:282:18).

**இல்லெனல் (பெ)** மரணம்: ''முஞ்சலும்...மரணம் இல்லெனல் என்பதுவும் சொல்லப்படுமே'' (நிக.பி:7:149-50).

**இல்லேம் (பெ)** இல்லாத யாம்: ''புகர் இல்லேம் யாம் இருப்ப'' (கைந்:56).

**இல்லேல் (11வி)** இல்லையாயின்: ''மருந்து பிறிது யாதும் இல்லேல் திருந்திழாய் என் செய்வாம்கொல் இனி நாம்'' (கலி:60:21-2).

**இல்லேன் (பெ)** இல்லாதவனாகிய நான்: ''உறு தவம் இல்லேற்கு ஒளித்தனள் தான் என'' (பெருங்:111:30).

**இல்லை (11வி)** 1. உண்டு என்பதன் எதிர்மறை: ''யாரும் இல்லை தானே கள்வன்'' (குறு:25:1). 2. கெடும்: ''அத்தின் அகரம் அகரமுனை இல்லை'' (தொல்:4:23). 3. இறந்தான்: ''நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை'' (குறள்:34:6).

**இல்லொடு வரவு (பெ)** குடிப் பிறப்பு: ''இளமையும் வனப்பும் இல்லொடு வரவும்'' (பெருங்:36:89).

**இல்லோர் (பெ)** 1. வீட்டிலுள்ளோர்: ''நம் இல்லோர் பெரு நகை காணிய சிறிதே'' (குறு:111:6-7). 2. தாமே தேடிய பொருள் இல்லாதவர்கள்: ''இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு'' (குறு:283:1-2). 3. இல்லாதவர்: ''நாணும் நட்பும் இல்லோர்த் தேரின்'' (அகம்:268:8). 4. கற்புடை மகளிர்: ''கள்ளோர் களி நொடை நுவல இல்லோர் நயந்த காதலர்'' (மது:662-3). 5. வறியவர்: ''உடையோர் இல்லோர்க்கு உறு பொருள் வீசி'' (பெருங்:120:100).

**இல்லோள் (பெ)** 1. இல்லாதவள்: ''ஒரு மகன் அல்லது இல்லோள்'' (புற:279:10-1). 2. மனைவி: ''இறைவற் பிரிந்த இல்லோள் போலவும்'' (பெருங்:108:72).

**இல்லோன் (பெ)** 1. வறியவன்: ''இல்லோன் இன்பம் காமுற்றுஅங்கு'' (குறு:120:1). 2. இல்லாதவன்: ''பூட்கை இல்லோன் யாக்கை போல''(புற:69:5).

**இல் வழக்கு (பெ)** இல்லதன் இன்மை கூறல்: ''இல் வழக்கு என்பது முயற்கோடு ஒப்பன'' (மணி:27:71).

**இல் வாழ்க்கை (பெ)** இல்லாளோடு கூடி வாழும் வாழ்க்கை: ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது '' (குறள்:5:5).

**இல் வாழ்வான் (பெ)** இல்லாளோடு கூடி வாழ்பவன்: ''இல்வாழ்வான் என்பான்'' (குறள்:5:1).

**இல் வினை (பெ)** இல்லறச் செயல்கள்: ''இல் வினை இன்பம் வெஃகி இறுபவே அறிவிலாதார்'' (சூளா:1852).

**இல (பெ)** 1. ஏடீ என்னும் பொருளுள்ள விளிப்பெயர்: ''துஞ்சுதியோ இல தூவிலாட்டி'' (நற்:154:5). 2. இல்லாதன: ''களிறு இலவாகிய புல் அரை நெடு வெளில்''(புற:127:3). 3. இலவம்: ''இல மலர்ப் பஞ்சிப் பாதத்து'' (சீவ:13:43).

**இல (11வி)** 1. இல்லாதன: ''நாளும் பாடு இல கவிழும் கண்ணொடு புலம்பி'' (குறு:11:1-2). 2. கொண்டில: ''நாண் இல மன்ற எம் கண்ணே'' (குறு:35:1). 3. உளவாகா: ''யாண்டும் இடும்பை இல'' (குறள்:1:4). 4. இல்லாதனவாம்: ''கோள் இல் பொறியின் குணம் இலவே'' (குறள்:1:9).

**இலக்கணக் கருமம் (பெ)** அங்க இலக்கண விளக்கம்: ''தனக்கு என்று ஆய்ந்த தலை இரும் பிடிகளுள் இலக்கணக் கருமம் எட்டா முறையது'' (பெருங்:39:191-2).

**இலக்கணப் போலி (பெ)** இலக்கணமுடையது போலத் தொன்று தொட்டு வழங்கி வரும் இலக்கணம் இல்லாத சொல்: ''இலக்கணம் உடையது இலக்கணப் போலி மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்'' (நன்:267).

**இலக்கணம் (பெ)** 1. இலக்கண விதி: ''ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்...இலக்கண மருங்கில் சொல் ஆறு அல்ல'' (தொல்:10:27). 2. இயல்பு: ''புறத் திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்'' (தொல்:20:1). 3. அமைதி: ''இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து'' (சில:3:12). 4. அழகு: ''இலக்கண இருக்கை திருத்திய பின்றை'' (பெருங்:62:116). 5. அடையாளம்: ''முலைக் கண்ணும் முத்தும் முழு மெய்யும் புல்லும் இலக்கணம் யாதும் அறியேன்'' (நால்:40:9). 6. சிறப்பியல்பு: ''பிறப்பு நெடு வாழ்க்கை செல்வம் வனப்பு நிலக் கிழமை மீக்கூற்றம் கல்வி நோய் இன்மை இலக்கணத்தால் இவ் வெட்டும் எய்துப'' (ஆ.கோ:2:1-3).

**இலக்கணமுடையது (பெ)** இலக்கண நெறியால் வரும் சொல்: ''இலக்கணம் உடையது இலக்கணப் போலி மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்'' (நன்:267).

**இலக்கணன் (பெ)** அழகன்: ''மிழலை மேவிய இலக்கணா'' (சம்:3:116:9).

**இலக்கணாதீதம் (பெ)** பொது இயல்பைக் கடந்தது: ''சுட்டும் இலக்கணாதீதம் சொரூபமே'' (மூல:2566).

**இலக்கணை (பெ)** ஒரு பொருளைக் காட்டற்கு உரிய சொல்லை மற்றொரு பொருட்குத் தந்துரைப்பது: ''விட்ட இலக்கணை தான் போம் வியோமத்து'' (மூல:2566).

**இலக்கம் (பெ)** 1. அம்பு முதலியன எய்து பழகும் குறி: ''தோல் துவைத்து அப்பின் துனை தோன்றுவ நிலைக்கு ஒராஅ இலக்கம் போன்றன'' (புற:4:5-6). 2. குறிப்பொருள்:

PY-5104

ED
DIC -TA
21
(1)

# GLOSSARY
# OF
# HISTORICAL TAMIL LITERATURE
# (UPTO 1800 AD)

## VOLUME - I

**அ to ஃ**

ÉCOLE FRANÇAISE
BIBLIOTHÈQUE
PONDICHÉRY
D'EXTRÊME-ORIENT

# வரலாற்று முறைத்
# தமிழ் இலக்கியப் பேரகராதி

ÉCOLE FRANÇAISE
BIBLIOTHÈQUE
PONDICHÉRY
D'EXTRÊME-ORIENT

PRJ 118199005

**Published by**

**SANTI SADHANA**


**(Charitable Trust)**

**125, Chamiers Road**

**Chennai - 600 028.**

MAISON DE L'ASIE

9218035399



அமரர் **சாக்கை இராஜம்** 22-11-1904 இல் பிறந்தவர். நல்ல கல்விக்குப் பின் பட்டயக் கணக்கரானார். ஆனால், பின்னர் தம் தமையனாருடன் தாமும் ஏல நிறுவனத்தின் உரிமை யாளரானார். அதனால் அவர் **"மர்ரே ராஜம்"** என்றே பெயர் பெற்றார். பள்ளிப்பருவத்திலிருந்தே அவருக்குத் தமிழில் ஆர்வமிருந்து வந்தது. அத்துடன், "தமிழ் கூறு நல்லுலகின் தவப்பயனாய்" தமிழ் மொழியின் இனிமையும் அழகும் சிறப்பும் அவரைப் பெரிதும் கவர்ந்தன என்றால் அது மிகையாகாது. அப்போது தமிழ் மொழி கவனிக்கப் படாமலிருந்ததும், அதற்குரிய இடத்தையும் கவனத்தையும் பெறா மலிருந்ததும் அவர் மனத்தில் தமிழிலக்கியத்திடம் தனி ஆர்வத்தைத் தூண்டி விட்டன. அவருக்குத் தமிழ்த் தாத்தா டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் முன்னோடியாகத் திகழ்ந்தார். அவரிடம் அவர் கொண்டிருந்த மதிப்பும் பெருமையும், அவரைப் பற்றி அவர் பேசும் போதெல்லாம் தலைவர் ஒருவரைப் புகழ்வதாகவே, அமைந்திருந்தன. அதனால், ஒருவர் எவ்வளவு ஏழையாக இருந்தாலும் அவரும் வாங்கும் அளவுக்குத் தமிழ் இலக்கியங்களை அச்சிட்டு வழங்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டார். அவரது இந்த நோக்கத்திற்குப் பெரும் புகழ் பெற்ற திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, திரு. தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திரு. கந்தசாமிப் பிள்ளை, திரு. பெ. நா. அப்புசாமி, திரு. பி. ஸ்ரீ ஆசார்யா, திரு. சா. கணேசன், திரு. அ. ச. ஞானசம்பந்தம், திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. வி. மு. சுப்பிரமணிய அய்யர் மற்றும் தமிழறிஞர் வேறு பலரும் பேரூக்கமளித்தனர்.

1955 இல் "தமிழிலக்கியச் செல்வம்" என்ற வரிசையில் பழந்தமிழிலக்கியங்களைப் பதிப்பிடத் தொடங்கினார். அதன் பிறகு முதலாயிரம், திருவாய்மொழி, இயற்பா, பெரிய திருமொழி, திருவாசகம், சிலப்பதிகாரம், மணிமேகலை, கல்லாடம், அஷ்டப்பிரபந்தம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பாட்டும் தொகையும், கம்ப ராமாயணம், வில்லிபாரதம் முதலிய நூல்களை மேற் குறிப்பிட்ட பேரறிஞர்களின் இடையறாத ஊக்கத்தின் ஒத்துழைப்பால் பதிப்பித்து, பதிப்பிடு வதற்குப் பெருஞ்செலவானதையும் பொருட்படுத்தாமல், ஒரு நூல் ஒரு ரூபாய் என்ற விலைக்கு வழங்கினார். தமிழிலக்கியங்களைப் பதிப்பித்து இத்தகைய மிகக் குறைந்த விலையில் வழங்கிய இவர் தமிழைப் பொதுமக்கள் அனைவரிடையேயும் பரப்பிய முன்னோடியாவர் என்று சொன்னால் அது முழுமையாகாத புகழ்ச்சியே யாகும்.

இதுவரை யாராலும் முயற்சி செய்யப்படாத ஒன்றான வரலாற்றுக் கொள்கையில் அகராதி/ சொல்லடைவு ஒன்றை வெளிக் கொணர வேண்டும் என்ற தன்னேரில்லாத் தமிழறிஞர்களின் அறிவுரையும் ஊக்கமும் அமரர்.திரு. **சா. இராஜம்** அவர்களை அப்பணியில் ஈடுபடத் தீர்மானிக்கச் செய்தன. அனைத்துத் தமிழிலக்கியங்களையும் கி.பி.1400-1600 வரையிலான கல்வெட்டுக்களையும் சேகரித்தார். அதுவரை கிடைத்துள்ள தமிழிலக்கியங்களில் சொல்லடைவுகள் தொகுக்கப் பெற்றன. 8000 கல்வெட்டுக்கள் பிரதி எடுக்கப்பட்டன. வரலாற்று முறையில் ஒழுங்குபடுத்தப் பட்டன. பிறமொழி எழுத்துக்களில் எழுதப் பெற்ற உண்மையான முழுமையான தமிழ் நூல்களில் உள்ள சொற்கள் தமிழில் எழுதப்பட்டன. விளக்கவுரைகளைக் கொண்ட மணிப் பிரவாள இலக்கியங்களும் வைணவப் பெரு நூல்களும் கையெழுத்துப் பிரதியாக 132 தொகுதிகளாக அகர அடைவு செய்யப்பெற்றன. கி.பி. 1600 வரையுள்ள அனைத்து இலக்கியங்களின் சொல்லடைவுகளும் கையெழுத்துப் பிரதி வடிவத்தில் 246 தொகுதிகளாகத் தயாரிக்கப் பெற்றுள்ளன.

அவர் நிறுவிய **சாந்தி சாதனா** நிறுவனம் வரலாற்றுக் கொள்கையின் அடிப்படையில் தமிழ் அகராதி அட்டவணையை விரைவில் பதிப்பித்து வெளியிடுவதன் மூலம் தமிழ்ப் பேரறிஞர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் பெரிதும் உதவியாயிருக்குமென்று நம்புகிறது.